Annexure - 1

**பழங்குடியினர் மற்றும் இதர மரபு வழி வன வாழ்வினர் உரிமைகள் (அங்கீகரிப்பு) சட்டம் 2006 மாவட்ட அளவிலான குழுக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திருமதி.மு.ஆசியா மரியம், இ.ஆ.ப.,**

ந.க.எண்.17413/2016/எல்2, நாள்: 03.01.2017

******

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர் வட்டாரம், புதுப்பட்டி முதல் கெடமலை வரை, வனத்துறைக்கு பாத்தியப்பட்ட வன நிலங்களில் 2.71.0 எக்டேர் மற்றும் வடுகம் முதல் மேலூர் வரை இராசிபுரம் வனச் சரகம் வனத்துறைக்கு உட்பட்ட 5.96.0 எக்டேர் வன நிலங்களில் குக்கிராமங்களுக்கு இணைப்புச்சாலைகள் பிரதம மந்திரி சடக யோஜன திட்டத்தின் கீழ் சாலை அமைக்க வெண்ணந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரால் வனப்பாதுகாப்பு சட்டம் 1980 ன் படி பிரேரணை ஆன்லைனில் முதன்மை தலைமை வன பாதுகாவலர் சென்னைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. முதன்மை தலைமை வனபாதுகாவலரால் பிரேரணை பரிசீலிக்கப்பட்டு, குறைப்பாடுகள் நிவர்த்தி செய்யுமாறு கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றான வன உரிமைச் சட்டம் 2006-ன் கீழ் மேற்படி சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கைகள் முடிவு பெற்ற விபரத்துடன் மாவட்ட ஆட்சித்தலைவரின் (Settlement of Forest Rights) சான்றினை இணைத்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வன உரிமைச்சட்டம் 2006-ன் கீழ் அங்கீகாரம் செய்து மேற்படி சாலைகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரை அனுப்பும் பொருட்டு, நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் 03.01.2018 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட வன அலுவலர், நாமக்கல் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் கொல்லிமலை பழங்குடியினர் இனத்தை சேர்ந்த திரு.வெ.சுப்ரமணியம், திருமதி.ப.தாமரைச்செல்வி, திரு.சி.ராஜேந்திரன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், புதுப்பட்டியிலிருந்து கெடமலைக்கு சாலை அமைக்கும் திட்டத்தில் இராசிபுரம் வட்டம், ஆர்.புதுப்பட்டி கிராமம், சர்வே எண்: 456 மலைப் புறம்போக்கு நிலத்தில் ஆரம்பித்து கெடமலை கிராமம் வரை சாலை வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த சாலையானது சர்வே எண்: 89 மொத்த பரப்பு 2891.97.0 எக்டேர் புதுப்பட்டி காப்புக் காடு (Pudupatty RF) நிலத்தில் 4.5 மீட்டர் முதல் 8.0 மீட்டர் அகலம் வரையிலும் 4.70 கி.மீ நீளத்திற்கு சாலை அமைக்க அளவீடு செய்யபட்டுள்ளது என்றும், இதன் மொத்தப்பரப்பு 2.71.0 எக்டேர் நிலமாகும்.

வடுகம் முதல் மேலூர் வரை சாலை அமைக்கும் திட்டத்தில் இராசிபுரம் வட்டம், புதூர் மலையாளப்பட்டி கிராமம், சர்வே எண்: 101 மலைப் புறம்போக்கு நிலத்தில் ஆரம்பித்து கீழூர் கிராமம் வழியாக மேலூர் கிராமம் வரையிலும் மற்றொரு சாலை வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த சாலையானது சர்வே எண்: 188 மொத்த பரப்பு 2375.70.0 எக்டேர் மல்லூர் காப்புக் காடு (Mallur RF) நிலத்தில் 4.5 மீட்டர் முதல் 6.0 மீட்டர் அகலத்தில் 13.050 கி.மீ. நீளத்திற்கு அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மொத்தப்பரப்பு 5.96.0 எக்டேர் ஆகும். இந்த காப்புக் காடுகளில் வன உரிமைச் சட்டத்தின் கீழ் உரிமை கோரி வருவாய்த்துறையிடம் வன உரிமை கூட்டம் 2006, நாள்: 13.12.2005-ன் படி இந்த மலைப் பகுதியில் வன உரிமை கோரப்படவில்லை.

மேலும் கீழுர் கிராம ஊராட்சியில் 14.07.2017 அன்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் புதுப்பட்டி முதல் கெடமலை வரை மற்றும் வடுகம் முதல் மேலூர் வரை தார்சாலை அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிராம சபை அங்கீகாரத்தினை தொடர்ந்து மேற்படி சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள கோட்ட அளவிலான குழுவிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு சாலைகளை அமைப்பதற்கு மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரைக்காக 03.01.2018-ல் நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவராலும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி சாலை அமைத்திட மேற்கண்ட நிலங்களில் வன உரிமை கோரப்படவில்லை என்றும், ஆட்சேபணை எதுவுமில்லை என்றும் முடிவுசெய்யப்பட்டு கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

3.1.18

மாவட்ட வனஉரிமைகுழு தலைவர்
மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்
நாமக்கல்

3.1.18

மாவட்ட வன உரிமை குழு உறுப்பினர்
மற்றும்
மாவட்ட வன அலுவலர்,
நாமக்கல்

3.1.18

மாவட்ட வன உரிமை குழு உறுப்பினர்
மற்றும்
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்
நாமக்கல்

பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த
வன உரிமை குழு உறுப்பினர்கள்

1.திரு.வெ.சுப்ரமணியம், — V. Subramani - 3.1.2018
பனஞ்சாட்டுப்பட்டி, ஆரியூர் நாடு

2.திருமதி.ப.தாமரைச்செல்வி,
சூளவந்திப்பட்டி, தேவனூர் நாடு. B.தாமரைசெல்வி

3.திரு.சி.ராஜேந்திரன்,
பெருங்கிராய்ப்பட்டி, வாழவந்தி நாடு.
3/1/2018